# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1723 - 2011 සැප්තැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2011.09.09

*1723 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1134 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1135 |


***கவனிக்க.-*** *தேசிய பொலிசுக் கலைக்கழகம் சட்டமூலம் 2011, ஓகத்து 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2011, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, செத்தெம்பர் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற வைத்தியப் பதிவாளர் பதவி - மாத்தறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, ஐப்பசி மாதம் 10 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, ஆவணி 24.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | மாத்தறை | மாத்தறை நகரப் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வைத்தியப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மாத்தறை |

9-330

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகம் பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - கேகாலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, ஐப்பசி மாதம் 10 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, ஆவணி மாதம் 24 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கேகாலை | மாவனல்லை | ஹல்பட கினிகொட கோரளை பிரிவில் உயன்வத்த (டீவனாகல) பகுதியில் மேலதிக முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கேகாலை |

9-331

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொதுச்சேவை ஆணைக்குழு

### இலங்கை விவசாய சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்திற்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த/மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை - 2011

விவசாய அமைச்சின் கீழுள்ள விவசாய திணைக்களத்தில் இலங்கை விவசாயச் சேவையின் II ஆம் வகுப்பு II ஆம் தரத்தில் இங்கு கீழ்க்காணும் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கு அமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2. விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்தல், பரீட்சைக்கு விண்ணப்பித்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

2.1 திறந்த பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளும் மட்டுப்படுத்திய பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளும் திறந்த, மட்டுப்படுத்திய இரு பரீட்சைகளுக்கும் தோற்றும் விண்ணப்பதாரிகளும் ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும். இவர்கள் இவ்வறிவித்தலின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தை பயன்படுத்தி தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ள வேண்டும். கடதாசியின் இரு பக்கங்களையும் உபயோகித்து 8 1/2" x 12 (ஏ4) அளவுடைய தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை விண்ணப்பதாரி தமது சொந்தக் கையெழுத்தில் தெளிவாக பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 1-4 வரையான பகுதிகள் முதல் பக்கத்திலும் மிகுதி 2 ஆம் 3 ஆம் பக்கங்களிலும் அமையுமாறு தயாரிக்கப்படல் வேண்டும் என்பதை முக்கியமாக கவனத்தில் கொள்க.

2.2 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்படாததும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் "டிபெக்ஸ்" பயன்படுத்தி திருத்தப்பட்டதுமான விண்ணப்பப்படிவங்களும் குறிப்பு இலக்கமும் ஏனைய தகவல்களும் மீள எழுதப்பட்டுள்ள

விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலிலிடப்படும் விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் மிக முக்கியம் என்பதை கவனத்தில் கொள்க. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் அதன் நிழற்பிரதியை சமர்ப்பிக்கத் தயாராயிருத்தல் வேண்டும்.

2.3 விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் பரீட்சையின் பெயரை சிங்கள மொழியிலான விண்ணப்பமாயின் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் மொழியிலான விண்ணப்பமாயின் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை 2011, ஒற்றோபர் 07 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு "விவசாயப் பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம்,பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை விவசாயச் சேவைக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த/மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை - 2011" எனும் வாசகம் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

2.4 விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை பிரிவுக்குப் பொறுப்பான பணிப்பாளர்/மாகாண சபையாயின் விவசாய விடயப் பொறுப்பு அமைச்சுச் செயலாளர் மூலம் அனுப்புதல் வேண்டும்.

**கவனிக்க.**- இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்படாததும் முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும், ஒழுங்கற்றதுமான விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை திணைக்களத்தின் அல்லது அமைச்சினைச் சேர்ந்த அலுவலரொருவரின் பெயருக்கு அனுப்புதல் கூடாது. விண்ணப்பப்படிவமொன்று தபாலில் காணாமல் போனமை அல்லது தாமதமாகக் கிடைத்தமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**3. வெற்றிடமாகவுள்ள பதவிகள், பதவி இலக்கம், விண்ணப்பிக்கக்கூடிய பரீட்சை :**

| பதவி | பதவி இலக்கம் | விண்ணப்பிக்கக்கூடிய பரீட்சை |
|---|---|---|
| (i) விவசாய உத்தியோகத்தர் | 1 | திறந்த/மட்டுப்படுத்திய |
| (ii) ஆராய்ச்சி அலுவலர் | 2 | திறந்த/மட்டுப்படுத்திய |
| (iii) விரிவுரையாளர் | 3 | திறந்த பரீட்சைக்கு மாத்திரம் |
| (iv) விவசாயப் பொருளியலாளர் | 4 | திறந்த/மட்டுப்படுத்திய |

**குறிப்பு 1 :**

* திறந்த போட்டிப் பரீட்சைக்காயின், கூடியது இரண்டு (2) பதவிகளுக்கு மட்டுமே விண்ணபிக்க முடியும். அவ்விரண்டு பதவிகளுக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட ஒரே விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

* மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதாயின் ஒரு (1) பதவிக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். இதனை மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

* திறந்த, மட்டுப்படுத்திய இரண்டு போட்டிப் பரீட்சைகளுக்கும் விண்ணப்பிப்பவர்கள் அதற்காக மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்ட ஒரே (1) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.

**4. சேவையில் அமர்த்தும் நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) இப்பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையனவுமாகும். இப்பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் விதவை அநாதைகள்/தபுதாரர் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களித்தல் வேண்டும்.

(ii) திறந்த ஆட்சேர்ப்பின்கீழ் நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்று வருட தகுதிகாண் காலமொன்றுக்கு உட்படுத்தப்படுவர். ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரியொருவர் தெரிவுசெய்யப்பட்டால் அவர் ஒரு வருட பரீட்சித்தல் காலமொன்றுக்கு உட்படுத்தப்படுவார். திறந்த ஆட்சேர்ப்பின் மூலம் நியமிக்கப்படும் அலுவலர்கள் பதவியில் நிரந்தரமாக்கப்பட முன்னர் உரிய முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் தீவின் எப்பகுதியிலும் சேவையாற்றத் தயாராயிருத்தல் வேண்டும்.

(iv) இந்நியமனங்கள் 2009.02.11 ஆந் திகதிய 1588/17 ஆம் இலக்க மற்றும் 2009.09.18 ஆந் திகதிய 1619/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்ட 2002.05.08 ஆந் திகதிய 1235/21 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விவசாய சேவைகள் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அமைவாக மேற்கொள்ளப்படும். தாபனக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10, 12 ஆகிய பந்திகளும் ஏற்புடையனவாகும்.

(v) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளின் மீது உங்கள் கவனம் வேண்டப்படுகின்றது.

(vi) திறந்த ஆட்சேர்ப்பின்கீழ் நியமிக்கப்படும் அலுவலர்கள் பதவியில் நிரந்தரமாக்கப்படும்போது ஏனைய விடயங்களோடு, ஆங்கில மொழி மூலமாக சேவையில் இணைந்த அலுவலர்கள் தகுதிகாண் காலத்தினுள் அரச கரும மொழி ஒன்றில் அதாவது சிங்களம் அல்லது தமிழ் மொழியில் தேர்ச்சிபெறுதல் வேண்டும். அரச கருமமொழித் தேர்ச்சி பரீட்சைகளில் விடுப்பு பெறுவதற்கு க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்திபெற்றமைக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றுக் குறிப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அல்லது பெறுபேற்றுச் சான்றிதழின் மூலப் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

(vii) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பிரகாரம் சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளும் அரசகரும மொழிகளாகும். எனவே அரச ஊழியர்கள் இவ்விரு மொழி மூலத்திலும் கடமையாற்றக்கூடியவாறு அ. நி. சு. நி. 07/2007 இன் பிரகாரம் நியமனத் திகதியிலிருந்து 5 வருட காலத்திற்குள் குறித்த இரண்டாம் மொழிமூலத்தில் தேர்ச்சிபெறல் வேண்டும்.

5. **கட்டமைப்பும் வருடாந்த சம்பள அளவுத் திட்டமும்.**- இப்பதவிகளுக்கு பொது நிர்வாக சுற்றுநிருபம் 6/2006 இற்கு அமைவான இணைந்த மாத சம்பள அளவுத்திட்டத்தின்கீழ் குறிக்கப்பட்டவாறாகும்.-

எஸ்எல்-1- ரூபா 22,935-645 x 10 - 790 x 8 - 1,050 x 17 - ரூபா 53,555.

II ஆம் வகுப்பு II ஆம் தரத்தின் ஆரம்பப்படி நிலை - ரூபா 22,935.

இலங்கை விவசாய சேவையின் II ஆம் தரத்தின் II ஆம் தரத்திற்கே ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவர்.

உரிய வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் உரிய காலத்தில் சித்தியடைபவர்களுக்கே சம்பள ஏற்றம் வழங்கப்படும்.

6. **ஆட்சேர்ப்பு முறை.**- பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் திறந்த மட்டுப்படுத்திய இரண்டு (2) போட்டிப் பரீட்சைகள் நடாத்தப்படும். திறந்த மட்டுப்படுத்திய பரீட்சார்த்திகள் 14(1) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் (பொது) வினாத்தாளிற்கு தோற்றுதல் வேண்டும். அத்துடன் 14(2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்புடைய வினாத்தாள்களில் ஒரு வினாத்தாளிற்கு கட்டாயமாகத் தோற்றுதல் வேண்டும். திறந்த, மட்டுப்படுத்திய விண்ணப்பதாரர்கள் விடயதான வினாத்தாளிற்கு வெவ்வேறாக தோற்றுதல் வேண்டும். அப்போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இங்கு கீழே காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

7. **திறந்த போட்டிப் பரீட்சை :**

7.1 ஆட்சேர்ப்பு முறை.- (அ) விரிவுரையாளர் பதவிகளுக்கு திறந்த போட்டிப் பரீட்சை மூலமாக மட்டுமே ஆட்சேர்ப்பு செய்யப்படும். விவசாயப் பொருளியலாளர் பதவி வெற்றிட எண்ணிக்கையில் 60% உம் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி வெற்றிட எண்ணிக்கையில் 60% உம் விவசாய உத்தியோகத்தர் பதவி வெற்றிட எண்ணிக்கையில் 33 1/3% உம் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் பூரணப்படுத்தப்படும். எவ்வாறாயினும், இப்பதவிகளுக்கு மட்டுப்படுத்திய பரீட்சை மூலம் நியமனம் செய்வதற்கு 8 ஆம் பந்தியின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள வீதாசாரத்திற்கு சமமான தொகையொன்றை சேர்த்துக்கொள்ள முடியாதிருக்கும் பட்சத்தில் எஞ்சியிருக்கும் வெற்றிடங்களும் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும்.

(ஆ) விண்ணப்பதாரியொருவருக்கு 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள பதவிகளில் தனது விருப்பின்படி கூடியது இரு பதவிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

(இ) உரிய பதவிகள் தொடர்பாக விண்ணப்பதாரிகளின் விடய அறிவை அளவிடுவதற்கு இலங்கை விவசாய சேவைப் பிரமாணக் குறிப்பின் II ஆம் அட்டவணையில் II ஆம் வினாப்பத்திரத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள வினாத்தாளிற்குப் பெற்றுக்கொள்ளும் புள்ளித்தொகை அதன் உயர் வரிசைக் கிரமப்படி வெவ்வேறாக நிரல்படுத்தி பட்டியலிடப்படுவதோடு அப்புள்ளிகளையும் பொது வினாத்தாளிற்கு பெறும் புள்ளிகளையும் கூட்டி அதன் வரிசைக் கிரமத்தை அடிப்படையாகக் கொண்ட, விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விருப்பத் தெரிவுகளையும் கவனத்தில் எடுத்து, உரிய ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளித் தொகையைப் பெற்ற பரீட்சார்த்திகளிலிருந்து வெற்றிட எண்ணிக்கையில் இரு மடங்கிற்கு மேற்படாத எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

7.2 பொதுத் தகைமைகள்.-

(அ) சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 22 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அத்தினத்திற்கு அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பான உயர் வயதெல்லை 40 வருடங்களாகும் ;

(இ) ஓர் விண்ணப்பதாரி மூன்று தடவைகள் மட்டுமே திறந்த பரீட்சைக்குத் தோற்ற முடியும் ;

(ஈ) சிறந்த உடல் ஆரோக்கியமுள்ளவராக இருக்க வேண்டியதுடன் அதனை வைத்திய பரிசோதனை அறிக்கை ஒன்றின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

7.3 *கல்வித் தகைமைகள்*.- இங்கு கீழே (i), (ii) ஆகியவற்றின்கீழ் காட்டப்பட்டுள்ள இலங்கை விவசாயச் சேவை II ஆம் வகுப்பு II ஆம் தர அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டிருத்தல் வேண்டும் :-

(i) *விவசாய உத்தியோகத்தர், விரிவுரையாளர், விவசாயப் பொருளியலாளர், பாட விடயத்தில் நிபுணத்துநர் பதவிகள்*-

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்பட்ட விவசாய விஞ்ஞானத்திலான நான்கு வருடப் பட்டம் ;

*அல்லது*

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெறப்பட்ட மூன்று வருட விவசாய விஞ்ஞான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெறப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றுடன் கூடிய இரு வருட பட்டப்பின் கல்வியிலான பட்டம் ;

*அல்லது*

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெறப்பட்ட விஞ்ஞானமானி விவசாயத் தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் நான்கு வருட பட்டம் ;

(ii) *ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி :*

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்பட்ட விவசாய விஞ்ஞானத்திலான நான்கு வருடப் பட்டம் ;

*அல்லது*

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெறப்பட்ட தாவரவியல், இரசாயனவியல் அல்லது விலங்கியல் தொடர்பான நான்கு வருட விஞ்ஞானமாணி விசேட பட்டம் ;

*அல்லது*

(இ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெறப்பட்ட விஞ்ஞானமாணி விவசாயத் தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் நான்கு வருட பட்டம் ;

*அல்லது*

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் பெறப்பட்ட மூன்று வருட விவசாய விஞ்ஞானம் அல்லது விஞ்ஞானமாணிப் பட்டம் அத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் ஏதாவதொரு விடயம் தொடர்பாக ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றுடன் கூடிய இரண்டு வருட பட்டப்பின்படிப்பு பட்டமொன்றைப் பெற்றிருத்தல். உரிய விடயதானங்கள் குறிப்பு I இல் கூறப்பட்டுள்ளன : -

**குறிப்பு** I :

(i) நோயியல்
(ii) பூச்சியியல்
(iii) மண்ணியல்
(iv) நுண் உயிரினவியல்
(v) விவசாயப் பொறியியல்
(vi) புள்ளிவிபரவியல் (Statistics)
(vii) கணனி விஞ்ஞானம்
(viii) உயிரியற் பல்லினத் தன்மை
(ix) சுற்றாடல் விஞ்ஞானம்
(x) உணவுத் தொழில்நுட்பம்
(xi) புவிச்சரிதவியல்
(xii) பிறப்புரிமையியல்
(xiii) பயிர் விஞ்ஞானம்
(xiv) விவசாய விஞ்ஞானம்
(xv) பயிராக்கவியல்
(xvi) தாவர இனவிருத்தி
(xvii) பீடைகொல்லிகள் இரசாயன விஞ்ஞானம்
(xviii) விஷ விஞ்ஞானம்

**குறிப்பு** II.- திறந்த ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்காக விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தில் அல்லது அதற்கு முன்னர் அடிப்படைக் கல்வித் தகைமைகளாக குறிப்பிடப்பட்டுள்ள பட்டம் அல்லது பட்டப்பின்படிப்புப் பட்டம் தொடர்பாக பூரணமாக தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும். பட்டப்படிப்பு சான்றிதழ்/பட்டப்பின்படிப்பு சான்றிதழின் செல்லுபடியாகும் திகதி, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியொன்றாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** III.- பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

8. **மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை**.- விவசாய உத்தியோகத்தர் பதவியில் காணப்படும் எண்ணிக்கையில் 66 2/3% உம் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவியில் காணப்படும் வெற்றிட எண்ணிக்கையில் 40% உம் விவசாயப் பொருளியலாளர் பதவியில் காணப்படும் வெற்றிட எண்ணிக்கையில் 40% உம் பரீட்சைக்குத் தோற்றும்போது அபேட்சகர்கள் வகித்த பதவிகளுக்காக ஒதுக்கப்படும் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதாசார அடிப்படையிலும் கீழே 8.2 பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமையவும் நிரப்பப்படும். எவ்வாறெனினும், மட்டுப்படுத்திய பரீட்சை மூலம் அவ்வீதாசாரங்களுக்கு சமமான தொகையொன்றைச் சேர்த்துக்கொள்ள முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் எஞ்சிய வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும் :-

| அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகள் | பரீட்சைக்குத் தோற்றும்போது வகித்த பதவிகள் | | |
|---|---|---|---|
| | விவசாயப் போதனாசிரியர், தோட்ட உதவியாளர், விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (விவசாயம்) | ஆராய்ச்சி உதவியாளர், மண் அளவையாளர்கள், காணி மதிப்பீட்டு அலுவலர், விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (விவசாயம்) | பொருளியலாளர் உதவியாளர், விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (விவசாயம்) |
| விவசாய உத்தியோகத்தர் | 66 2/3% | | |
| ஆராய்ச்சி உத்தியோகத்தர் | | 40% | |
| விவசாயப் பொருளியலாளர் | | | 40% |

8.1 தகைமை பெறும் உத்தியோகத்தர்கள்.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு முந்திய கிட்டிய 5 வருடத்தினுள் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டிருக்கும் :

(அ) இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் விசேட வகுப்பு விவசாய போதனாசிரியர் ஆராய்ச்சி உதவியாளர், மண் அளவையாளர், காணி மதிப்பீட்டு உத்தியோகத்தர் ஆகிய பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள்.

(ஆ) இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் I ஆம் வகுப்பில் குறைந்தது 4 வருட திருப்திகரமான செயலூக்கமுடைய சேவைக்காலத்தை பூரணப்படுத்தியிருக்கும் விவசாயப் போதனாசிரியர், ஆராய்ச்சி உதவியாளர், மண் அளவையாளர்கள், காணி மதிப்பீட்டு உத்தியோகத்தர் ஆகிய பதவிகளை வகிப்போர்.

(இ) 5 வருட செயலூக்கமுடைய சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியுள்ள விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் (விவசாயம்) ஆகிய பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் (இப்பதவிகளில் ஒன்றை வகிக்கும் தகுதியுடைய அலுவலர் ஒருவருக்கு மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 3 அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளில் ஒன்றுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

(ஈ) 5 வருட செயலூக்கமுடைய சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியுள்ள பொருளியலாளர் உதவியாளர் பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்கள்.

(உ) 10 வருட செயலூக்கமுடைய சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியுள்ள தோட்ட உதவியாளர் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள்.

(ஊ) 5 வருட செயலூக்கமுடைய சேவைக்காலத்தைப் பூரணப்படுத்தியுள்ள விவசாய விஞ்ஞான அல்லது விஞ்ஞானமாணி பட்டத்தைப் பெற்றுள்ள விவசாயப் போதனாசிரியர், தோட்ட உதவியாளர், ஆராய்ச்சி உதவியாளர், மண் அளவையாளர், காணி மதிப்பீட்டு உத்தியோகத்தர்.

**குறிப்பு 1**.- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதிக்குப் பின்னர் விண்ணப்பதாரியொருவர் தொடர்பாக கடந்த காலத்திற்கு செல்லுபடியான வகையில் அமுல்படுத்தப்படும் நிவாரணங்கள் அல்லது பதவி உயர்வுகள் என்பன பரீட்சைக்குத் தோற்றத் தேவையான தகைமையொன்றாகக் கருதப்பட மாட்டாது.

8.2 ஆட்சேர்ப்பு முறைமை :

(அ) மேலே 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பதவிக்காகவும் இவ்வறிவித்தலின் 14 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொது வினாத்தாளிற்கும், உரித்தான வகையில் விடயதான தொடர்புடைய விடயத்துக்குரிய வினாத்தாள்களுக்கும் விண்ணப்பதாரிகள் விடையளிக்க வேண்டும்.

(ஆ) உரிய அனைத்து வினாத்தாளிலும் 40% அல்லது அதைவிடக் கூடுதலான புள்ளிகள் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(இ) நேர்முகப் பரீட்சையில் சேவை மூப்பிற்காக வழங்கப்படும் புள்ளிகள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைத்ததன். பின் அப்புள்ளிகளையும் எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளையும் கூட்டுவதன் மூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் ஒவ்வொரு பதவிக்குமான மட்டுப்படுத்திய பரீட்சைப் பெறுபேறுகளின் இறுதி முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு விவசாயப் பணிப்பாளர் நாயகத்திற்கு பெற்றுக்கொடுக்கப்படும். அம்முன்னுரிமைப் பட்டியலின் உயர் ஒழுங்கின் பிரகாரம் 8 ஆம் பந்தியில் விதிமுறைகளுக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

9. **பரீட்சை நடைபெறும் திகதியும் இடமும்**.- இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கொழும்பில் மாத்திரம் 2011, நவெம்பர் மாதம் நடாத்தப்படும்.

10. **பரீட்சைக் கட்டணம்** :

* ஒரு பதவிக்கு விண்ணப்பிப்பதாயின் பரீட்சைக் கட்டணம் 800 ரூபா ஆகும்.
* இரண்டு பதவிகளுக்கும் விண்ணப்பிப்பதாயின் பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஆகும்.
* திறந்த, மட்டுப்படுத்திய இரு போட்டிப் பரீட்சைகளுக்கும் விண்ணப்பதாரியின் பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200 ஆகும்.

இக்கட்டணத்தை விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு பேராதனை மக்கள் வங்கியிலுள்ள 057-100179027204 ஆம் இலக்க கணக்கிற்கு வரவுவைத்து நாட்டின் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்தலாம். இதற்கு எந்தவொரு மாவட்ட/பிரதேச செயலகத்திலிருந்தோ அல்லது அரச திணைக்களமொன்றிலிருந்தோ பெறப்பட்ட பொது 118 படிவத்தில் (PIV) வரவுத் தலைப்பாக 15/140 ஐ குறித்து ஏனைய விபரங்களையும் பூரணப்படுத்தி வங்கிக்கு கையளித்ததன் பின்னர் வங்கியால் உங்களுக்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டையும் வங்கியின் உத்தியோகபூர்வ முத்திரையிட்ட மேற்கூறப்பட்ட (PIV) படிவத்தையும் விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழன்றுவிடாதபடி ஒரு விளிம்பை மாத்திரம் ஒட்டுதல் வேண்டும். இப்பற்றுச்சீட்டினதும் (PIV) படிவத்தினதும் நிழற் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கும். எக்காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

11. **பரீட்சைக்குத் தோற்றல்**.- (அ) விண்ணப்பங்கள் அனுப்பிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையப் பொறுப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகளை சமர்ப்பிக்காதவர்கள் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டைகளை அனுப்பியபின் பரீட்சைத் திணைக்களத்தால் அது பற்றி உடனடியாக செய்திப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்படும் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களின் பின்னரும் அனுமதி அட்டைகளைக் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி உடனடியாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தம்வசம் வைத்துள்ள விண்ணப்பப்படிவத்தினதும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் அத்தாட்சிப்படுத்திய நிழற் பிரதிகளையும் பதிவுத் தபாலிடும்போது வழங்கப்பட்ட பற்றுச்சீட்டையும் கொழும்பு அல்லாத வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டையினை அனுப்புவதற்காக உரிய தொலைநகல் (பக்ஸ்) இலக்கமொன்றையும் குறிப்பிட்ட உமது வேண்டுகோள் கடிதத்தோடு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

(ஆ) பரீட்சார்த்திகள் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் தமக்குரித்தான பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் குறித்த பரீட்சை நிலையத்திற்கான அனுமதி அட்டைகளை நிலையத்திற்கு சமுகமளிக்கும் முதல் தினத்தன்று நிலைய பொறுப்பதிகாரிக்கு கையளித்தல் வேண்டும். தாம் தோற்றவிருக்கும் பரீட்சையின் உரிய வினாத்தாள்களுக்கு விடையளித்தல் பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும். சகல பரீட்சார்த்திகளும் பின்பற்றவேண்டிய சட்ட ஒழுங்கு விதிகள் இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளை பேணி நடக்க கடப்பாடுடையவர்களாவர். இச்சட்ட ஒழுங்குவிதிகளை மீறுபவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாக நேரிடலாம்.

(இ) பரீட்சார்த்தியொருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுதல், அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதியொன்றைப் பெற்றுள்ளதாகக் கருதப்படலாகாது.

12. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காக கீழ்வரும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

*13. **பரீட்சை முறைமை** .-*

(i) இப்பரீட்சை இரண்டு பகுதிகளாக நடைபெறும். எல்லாப் பதவிகளுக்குமாக பரீட்சைக்கு விண்ணப்பித்த மட்டுப்படுத்திய/திறந்த சகல அபேட்சகர்களுக்கும் பொது வினாத்தாளுக்கான பரீட்சை ஒரே நாளில் நடைபெறும். அப்பொது வினாத்தாளிற்கு 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு விடயதான வினாத்தாளுக்கான இரண்டாம் கட்ட பரீட்சை நடைபெறும்.

(ii) *பரீட்சை மொழி*.- இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிமூலங்களில் நடாத்தப்படும். தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iii) பரீட்சார்த்தியொருவர் தோற்றும் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழி மூலத்தில் விடையளித்தல் வேண்டும்.

*14. **போட்டிப் பரீட்சையின் ஒழுங்குவிதிகளும் பாடப்பரப்பும்**.-* மேலே 06 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எல்லா விண்ணப்பதாரிகளும் இங்கு பின்னால் குறிப்பிடப்படும் பாடப்பரப்பிற்கு ஏற்புடையவாறு 1, 2 ஆகிய வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும் :-

(i) ***1 ஆம் வினாத்தாள்***.- பொது வினாத்தாள் :
மொழி, கணிதம், தர்க்கித்தல் திறமை என்பவற்றை அளவிடுவதற்கான வினாக்களடங்கிய 1 1/4 மணிநேர சுருக்க விடைகோரும் பல்தேர்வு வினாக்களடங்கிய வினாப்பத்திரமொன்றாகும். மொத்தப் புள்ளிகள் 150 ஆகும். சகல விண்ணப்பதாரிகளும் கட்டாயம் தோற்றுதல் வேண்டும்.

(ii) ***2 ஆம் வினாத்தாள்***.- விடயதான அறிவை மதிப்பிடுதல்.- இங்கு குறித்துரைக்கப்பட்டுள்ள விடயப் பரப்பில் அறிவை அளவிடுவதற்காக நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையாகும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம் விண்ணப்பிக்கும் பதவிக்கு அல்லது பதவிகளுக்கு ஏற்புடையவாறு முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வினாப்பத்திரங்களில் தெரிவுசெய்யப்படும் வினாப்பத்திரமொன்றுக்கு அல்லது இரண்டு வினாப்பத்திரங்களுக்கு தோற்றுதல் வேண்டும். இவ்வினாப்பத்திரம் சுருக்க விடை கோரும் பல்தேர்வு வினாக்களைக் கொண்ட இரண்டு மணிநேர வினாப்பத்திரமொன்றாகும். மொத்தப் புள்ளிகள் 150 ஆகும்.

ஒவ்வொரு பதவிக்கும் ஏற்புடைய பாடப்பரப்புகள் முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

*15. **நேர்முகப் பரீட்சை**.-* அரச சேவை ஆணைக்குழுவினால் நேர்முகப் பரீட்சைக் குழு நியமனம் செய்யப்படும். அதன் தலைவராக விவசாயப் பணிப்பாளர் நாயகம் பணியாற்றுவதுடன் விவசாயம் மற்றும் பொது நிர்வாக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுச் செயலாளர்களின் ஒரு பிரதிநிதி வீதமும் பொருத்தமான வகையில் விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர்களில் இருவர் ஏனைய அங்கத்தவர்களாகவும் பணியாற்றுவர் :-

(i) மேலே 7.1 (இ), 8.2 (ஆ) உப பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய திறந்த/மட்டுப்படுத்திய விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகளின் அடிப்படைத் தகைமைகளை உறுதி செய்வதற்காக சான்றிதழ்களும் ஏனைய ஆவணங்களும் பரீட்சிக்கப்படும்.

(ii) விண்ணப்பதாரியொருவர் திறந்த போட்டிப் பரீட்சைகளில் அட்டவணைப்படுத்தப்பட்ட இரண்டு பதவிகளுக்கு விண்ணப்பித்து அவ்விரு பதவிகளுக்காகவும் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் போதுமான புள்ளித் தொகையொன்றைப் பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் பரீட்சார்த்திகளின் விருப்பத்தையும் வெற்றிட எண்ணிக்கையையும் கருத்திலெடுத்து சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

(iii) மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் சேவை மூப்பிற்கான புள்ளிகள் வழங்கப்படும்.

**குறிப்பு 1.- *சேவை மூப்பிற்கு புள்ளிகள் வழங்கப்படும் முறை*.-** விண்ணப்பதாரியொருவர் குறித்த தகைமைகளைப் பூரணப்படுத்தும் திகதியிலிருந்து விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிவரை சேவையாற்றிய செயலூக்கத்துடனான காலம் மட்டும் சேவை மூப்புக்கான புள்ளி வழங்குவதற்காக கவனத்திலெடுக்கப்படும். உயர்ந்தபட்சம் 30 புள்ளிகளுக்கு உட்பட்டதாக ஆண்டு ஒன்றுக்கு 2 புள்ளிகள் வீதம் 180 நாட்கள் அல்லது அதைவிடக்கூடிய காலமொன்றுக்கு 1 புள்ளி வீதமும் வழங்கப்படும்.

**குறிப்பு 2.-** இடைநிலை தொல்நுட்பவியல் சேவையில் II ஆம் வகுப்பு "அ" பிரிவில் 4 வருட செயலூக்கம் கொண்டதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்திற்குப் பின்னர் பூரணப்படுத்தியுள்ள செயலூக்கமுடைய திருப்திகரமான சேவைக்காலத்திற்கும் சேவை மூப்பிற்கான புள்ளிகள் வழங்கப்படும்.

16. விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களை இணைத்து அனுப்புதல் கூடாது. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உறுதி செய்வதற்காக சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு தயாராயிருத்தல் வேண்டும்.

17. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனக் கண்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் ஆகிய எச்சந்தர்ப்பத்திலும் அவரின் பரீட்சார்த்தித் தன்மையிலிருந்து நீக்கப்படலாம். பரீட்சார்த்தியொருவர் வழங்கியுள்ள தகவலொன்று பொய்யானதென அல்லது ஏதும் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளமை நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

18. போட்டிப் பரீட்சை தொடர்பான விண்ணப்பப்படிவங்களில் சேர்த்துக்கொள்ளப்படும் நடைமுறையிலும் தெளிவற்ற நிலை தோன்றுமாயின் அதுபற்றிய இறுதி முடிவு நியமன அதிகாரியைச் சார்ந்ததாகும்.

19. காணப்படும் வெற்றிடங்கள் சகலதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ நிரப்புவது தொடர்பாக நியமன அதிகாரியே இறுதி முடிவெடுப்பார்.

20. பிரதிகளுக்கிடையே தெளிவற்ற தன்மை காணப்படுமாயின் சிங்கள மொழிப் பிரதியே செல்லுபடியானதாக கருதப்படும்.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
பொதுச்சேவை ஆணைக்குழு.

இல. 117, நாவலை வீதி,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 5.
10.08.2011.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பொதுச்சேவை ஆணைக்குழு**

**இலங்கை விவசாய சேவை வகுப்பு II தரம் II பதவிகளுக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த/மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சை - 2011**

**Open & Limited Competitive Examination for Recruitment to the Class II, Grade II of the Sri Lanka Agricultural Service - 2011**

பரீட்சை இல. : [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

விண்ணப்பிக்கும் பரீட்சையுடன் தொடர்பான பதவி/பதவிகள்
(வர்த்தமானியின் 3,7, 8 ஆகிய பந்திகளைப் பார்க்க.)

| மட்டுப்படுத்திய போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பதவியும் அதன் இலக்கமும் | | திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பதவியும் அதன் இலக்கமும் | |
|---|---|---|---|
| பதவி | பதவி இலக்கம் | பதவிகள் | பதவி இலக்கம் |
| 1. | | 1. | |
| | | 2. | |

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
வர்த்தமானியின் 13 (ii) பந்தியைப் பார்க்க.

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய கூட்டில் பொருத்தமான இலக்கத்தை இடுக.)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு) :----.

அ) சிங்களத்தில்/தமிழில் :----.
(ஆ) ஆங்கிலத்தில் (Capital letters) :----. (உ+ம்) Jayantha, M. A. C.

(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :----.
(அ) சிங்களத்தில்/தமிழில் :----.
(ஆ) ஆங்கிலத்தில் (Capital letters) :----.

(iii) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(iv) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள்

2. (i) நிரந்தர வதிவிட முகவரி (பிரவேசப்பத்திரங்கள் இம்முகவரிக்கு அனுப்பப்படும்) :

(அ) சிங்களத்தில்/தமிழில் :----.
(ஆ) ஆங்கிலத்தில்:----.

(ii) அலுவலக முகவரி (அரச சேவையிலுள்ள அலுவலர் எனின், அவரின் அலுவலக முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அதனை உடனடியாக அறிவித்தல் வேண்டும்.) :

(அ) சிங்களத்தில்/தமிழில் :----.
(ஆ) ஆங்கிலத்தில் :----.

3. பால் :

ஆண் - 0
பெண் - 1 ☐

(உரிய கூட்டில் பொருத்தமான இலக்கத்தை இடுக.)

4. (அ) தேசிய அடையாள அட்டை இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐

(ஆ) தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

5. இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுக (உரிய கூட்டில் பொருத்தமான சொல்லை எழுதுக) : ஆம்/இல்லை ☐

6. கல்வித் தகைமைகள் :

6.1 பெற்றுள்ள பட்டங்கள் தொடர்பான தகைமைகள் :

| பெற்றுள்ள பட்டம்/பட்டங்கள் | கற்கை வருடமும் அப்பட்டம் செல்லுபடியாகும் தினமும் தெளிவாகக் குறிப்பிடுக | பல்கலைக் கழகம் / கழகங்கள் | பாடங்கள் | சித்தி | மொழி மூலம் |
|---|---|---|---|---|---|
| 1. நான்கு வருட விவசாய விஞ்ஞானம்<br>2. மூன்று வருட விவசாய விஞ்ஞானம்<br>3. நான்கு வருட விஞ்ஞானமாணி<br>4. மூன்று வருட விஞ்ஞானமாணி<br>5. பட்டப்பின் கல்வியிலான இரு வருட பட்டம் (ஆராய்ச்சிக் கட்டுரையுடனான) | | | | | |
| 1. | | | | | |
| 2. | | | | | |

6.2 இரு வருட விவசாய டிப்ளோமா கற்கைநெறி :

| விவசாய டிப்ளோமாவின் கற்கை வருடமும் டிப்ளோமா செல்லுபடி ஆகும் திகதியும் (தெளிவாகக் குறிப்பிடுக.) | விவசாயக் கல்லூரி/நிறுவனம் | சித்தி | மொழிமூலம் |
|---|---|---|---|
| | | | |

7. இதற்கு முன்னர் இலங்கை விவசாய சேவைக்கு ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைகளுக்கு தோற்றியுள்ளீரா ? : ----.
அவ்வாறெனில் தோற்றிய ஆண்டு/ஆண்டுகளைக் குறிப்பிடுக :----.

8. மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை அபேட்சகர்கள் வர்த்தமானி அறிவித்தலில் 8 ஆம் பந்தியின் பிரகாரம் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை பெறுவதற்கு பெற்றுள்ள தகைமைகளை இங்கு குறிப்பிடுக.

| தற்போதைய பதவி | மட்டுப்படுத்திய ஆட்சேர்ப்பின்கீழ் சேர்த்துக்கொள்வதற்கு தகுதி பெறும் பதவிகள் | விவசாய உத்தியோகத்தர், ஆராய்ச்சி உத்தியோகத்தர், விவசாயப் பொருளியலாளர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு உரிய தகைமைகளைப் பூரணப் படுத்தும் திகதி |
|---|---|---|
| ஆராய்ச்சி உதவியாளர்<br>மண் அளவை உத்தியோகத்தர்<br>காணி மதிப்பீட்டு உத்தியோகத்தர்<br>விவசாயப் போதனாசிரியர்<br>தோட்ட உதவியாளர்<br>பொருளியலாளர்<br>உதவியாளர்<br>விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்<br>நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (விவசாயம்) | 1. ஆராய்ச்சி உத்தியோகத்தர்<br>2. விவசாய உத்தியோகத்தர்<br>3. விவசாய பொருளியலாளர் | (வர்த்தமானி அறிவித்தலின் 8.1 இல் தகைமைகளைப் பூரணப்படுத்தும் தினம்) |
| | | |

9. நீதிமன்றமொன்றினால் நீர் ஏதும் தவறுக்கு குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா ? ஆம்/இல்லை :----.
ஆம் எனில் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுக :----.

10. பரீட்சைக் கட்டணமாக விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட்ட ரூபா 800, 1,000, 1,200 க்கான பற்றுச்சீட்டையும் வங்கியால் உமக்கு வழங்கப்பட்ட உத்தியோக முத்திரையிடப்பட்ட (PIV) படிவத்தையும் (பொது 118) பிரித்தெடுக்கக்கூடியதாக ஒரு விளிம்பினை மாத்திரம் இங்கு ஒட்டுதல் வேண்டும். (பணம் செலுத்தப்பட்ட வங்கிக் கிளையையும், செலுத்தப்பட்ட தொகையையும், திகதியையும் இங்கு குறிப்பிடுக.)

| பணம் செலுத்திய வங்கிக் கிளையின் பெயர் | செலுத்திய தொகை | திகதி |
|---|---|---|
| | | |

பற்றுச்சீட்டையும் (PIV) படிவத்தையும் கழன்றுவிழாதபடி மேல் விளிம்பினால் மாத்திரம் இங்கு ஒட்டுக.)

11. **விண்ணப்பதாரியின் உறுதியுரை.**- இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதுமென இத்தால் உறுதிசெய்கின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள ஏதும் தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவையாக அல்லது பிழையானதாக சேர்த்துக்கொள்வதற்கு முன்னர் கண்டறியப்படுமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும், சேர்த்துக்கொண்டதன் பின்னர் கண்டறியப்படுமிடத்து எனது நியமனம் உடனடியாக செல்லுபடியற்றதாக்கப்படும் என்பதையும்,

விண்ணப்பத்தைப் பூரணப்படுத்துவதில் ஏதும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் அதற்கான பொறுப்பு என்னைச் சாரும் என்பதையும் நான் நன்கறிவேன். பரீட்சை தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு இணங்குகிறேன். மேலும் நான் ஒரு விண்ணப்பத்தை மாத்திரம் சமர்ப்பித்துள்ளேன் எனவும் உறுதி கூறுகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

(விண்ணப்பதாரர் அரச திணைக்களமொன்றில் கடமையாற்றுபவரெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழுடன் தமது திணைக்கள/மாகாணத் திணைக்கள தலைவரூடாக/மாகாண விவசாய விடயப் பொறுப்பு அமைச்சுச் செயலாளர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்).

**விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ................................ ஆந் திகதி தமது கையொப்பத்தை இட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன். திரு./திருமதி/செல்வி .......................... திணைக்களத்தில்/மாகாண சபையில் .................................. பதவியில் ................................. ஆந் திகதி முதல் கடமையாற்றுகிறார் எனவும் அவருடைய வேலைகள் திருப்திகரமானவை/திருப்தியற்றவை எனவும் கடந்த கிட்டிய 5 ஆண்டுக் காலத்தில் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படவில்லை/உட்பட்டுள்ளார் எனவும் சகல சம்பள ஏற்றங்களையும் பெற்றுள்ளார்/பெறவில்லை எனவும் உரிய பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன். அவர் தெரிவுசெய்யப்பட்டால் சேவையினின்றும் அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

----,
கையொப்பத்தை உறுதி செய்யும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிசெய்பவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின்/மாகாண திணைக்களத் தலைவரின்/மாகாண விவசாய விடயப் பொறுப்பு அமைச்சுச் செயலாளரின் சான்றிதழ்**

திரு./ திருமதி/ செல்வி ................................................ இத்திணைக்களத்தில்/ மாகாண சபையில் ........................................ ஆக கடமையாற்றுகிறார். இவரின் வேலை, நடத்தை என்பன திருப்தியானவை என்றும், இப்பதவி தொடர்பான 8.1 ஆம் பந்தியில்க குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளமையால் இவர் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு சகல வழியிலும் தகுதியானவர் என்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன./எடுக்கப்படவில்லை என்றும் சான்றுபடுத்துகிறேன்.

----,
திணைக்களத் தலைவரின்/மாகாண திணைக்களத்
தலைவரின்/மாகாண விவசாய விடயப் பொறுப்பு
செயலாளரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

**முதலாம் அட்டவணை**

ஒவ்வொரு பதவியோடு தொடர்புடைய விடய விதப்புரைகள் கீழே தரப்பட்டுள்ளன :-

(i) ***ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கான வினாத்தாள்.***- விண்ணப்பதாரர்களின் விருப்பப்படி கீழே (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பிரிவுகளுள் ஒரு பிரிவுக்கு மாத்திரம் விடையளித்தல் வேண்டும் :-

(அ) **பிரிவு :**

(1) விவசாயத் தாவரவியல்.- பயிர் வகைப்படுத்தல் கோட்பாடு, பயிர்களின் வளர்ச்சி மற்றும் உடற்கட்டமைப்பியற் கோட்பாடுகள்.

(2) *பிறப்புரிமையியலும் தாவர வளர்ப்பும்.-* மென்டலின் விதி, இனப்பெருக்கம், பிறப்புரிமையியல், விகாரம், மூலக்கூற்று பிறப்புரிமையியல், கலப் பிறப்புரிமையியல், அளவறி பிறப்புரிமையியல், தாவர வளர்ப்புக் கோட்பாடு, பிறப்புரிமையியல் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் உயிரின மாற்றங்கள், மகரந்த சேர்க்கை மற்றும் இனவிருத்தி எண்ணக்கரு அமைப்பு, ஒவ்வாமை பெரிய மற்றும் கலப்பற்ற வரிசைத் தெரிவு, பரவலாக உபயோகிக்கப்படும் இனவிருத்தி முறைகள், தற்போதைய போக்கும்.

(3) *தாவர நோயியல்.-* நோயை உருவாக்கம் உயிர்க்கூட்டம் தாவரங்கள் காட்டும் நிர்ப்பீடனம், நிர்ப்பீடன முறைகள்- இவைகளைக் கட்டுப்படுத்துவதில் தாவர நோயியல் கோட்பாடு மற்றும் நோய்க் கட்டுப்பாடு சம்பந்தமான தற்போதைய போக்கு நோயைக் கண்டுபிடிப்பதில் தொழில்நுட்ப முறைகள், நோய் அறிகுறி விஞ்ஞானம், கோக் ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்ட நோய்களைக் கண்டுபிடிக்கும் புதிய தொழில்நுட்ப முறையின் (ELISA) தற்போதைய போக்கு, DNA பதித்தல்.

(4) *பூச்சியியல் கோட்பாடுகள்.-* விலங்குகளை வகைப்படுத்தல் கோட்பாடுகள், கிருமிகளின் வகைப்படுத்தல் முறைகள், வாழ்வுத் தகவல்கள் மற்றும் பாதிப்புகள், கிருமிப் பாதிப்புகளின் பொருளாதார முக்கியத்துவம், கிருமிகளின் பெருக்கல் மற்றும் பாதிப்புகளை மதிப்பீடு செய்தல்.

(5) *விதைத் தொழில்நுட்பம்.-* விதை உடற் கட்டமைப்பியல் கட்டமைப்பு, உருவவியல், முளையிடுதல், வாழ்தகவு, விதைப் பரிசோதனை, தூய்மைப் பரிசோதனை, விதை உற்பத்திக்கான சந்தர்ப்பம், விதை அத்தாட்சிப்படுத்தல், விதை களஞ்சியப்படுத்தல்

(6) *தாவர இழைய வளர்ப்பு விஞ்ஞானம்.-* கோட்பாடுகள், இழைய வளர்ப்பு விஞ்ஞான வசதிகளின் அவசியம், ஊடகங்கள், இழைய வளர்ப்பு விஞ்ஞான நடுகை முறைகள், பாவனை செய்யப்படும் சந்தர்ப்பங்கள், முதலுரு வளர்ப்பு, விகாரம் ஏற்படுதல், முளையங்கள், பாதுகாக்கப்படல், பரிசோதனைக் குழாய் கருக்கட்டல், பிறப்புரிமையியல் கூர்ப்பு, உறைநிலைப் பாதுகாப்பு.

(7) *விவசாய இரசாயனவியல்.-* உயிரின இரசாயனவியற் கோட்பாடுகளும் விவசாயத்தில் உயிரின இரசாயனவியலின் செயல்முறை உபயோகமும் உணவு இரசாயனவியல் கோட்பாடுகளும் விவசாயத்தில் உணவு இரசாயனவியலின் செயன்முறை உபயோகமும் இரசாயன பகுப்பாய்வுக் கோட்பாடுகளும் விவசாயத்தில் அதன் செயன்முறை உபயோகமும்

*அல்லது*

(ஆ) **பிரிவு :**

(1) *பயிராக்கவியல்.-*விவசாயக் காலநிலை விஞ்ஞானம், சுற்றாடவியல், காணி அபிவிருத்தி, நிலத்தைப் பண்படுத்தல், பயிர் விருத்தி மற்றும் உடற்றொழிலியல் கோட்பாடு, பயிர் விருத்தி அளவீடு விளைச்சல் சாராமாறி பசளை சிபாரிசு மற்றும் வினைத்திறனான களைகளின் உயிரினவியல் மற்றும் கட்டுப்பாடு, நீர் விநியோக முறைகளின் கோட்பாடுகள் பயிர், மண் மற்றும் நீர் ஆகியவற்றின் தொடர்புகளின் கோட்பாடுகள்.

(2) *பயிர் விஞ்ஞானம்.-* நெல், மேட்டு நிலத் தானியங்கள், வன் தானியங்கள், கிழங்குப் பயிர்கள், மறுவயற் பயிர்கள் ஆகியவற்றின் உடற்றொழியல், விருத்தியை ஊக்குவிக்கும் முறைகள், நடுகை முறைகள், பயிர் கட்டுப்பாட்டு பௌதிக, இரசாயன மற்றும் உயிரினவியல் முறைகள், விஞ்ஞான ரீதியிலான புற்தரையை உண்டாக்குதல் மற்றும் அவற்றின் பரிபாலனம், பலகை உற்பத்தி மற்றும் பழங்கள் உற்பத்தி கோட்பாடுகள்.

(3) *மண்ணியல்.-* மண் நிர்மாணம், மண்ணின் பௌதிக, இரசாயன குணநலன்கள் பயிர்ச்செய்கைக்குத் தொடர்புள்ளதாக மண்ணில் உள்ள சிக்கல்கள், மண்ணின் செழிப்புத் தன்மை கட்டுப்பாடு, நீர் போசாக்கு கட்டுப்பாடு, தாவரப் போசாக்கு மண் வகைப்படுத்தல் கோட்பாடுகள்.

(4) *பிறப்புரிமையியலும் தாவர இனவிருத்தியும்.-* அடிப்படைக் கொள்கைகள் மென்டலின் விதிகள், இனப்பெருக்க பிறப்புரிமையியல், விகாரம், முதலுரு பிறப்புரிமையியல், கலங்களின் பிறப்புரிமையியல், தாவர இனவிதியின் கோட்பாடுகள், கருமூலவளங்களைப் பாதுகாத்தல் மற்றும் உயிரின பல்லியல் தன்மை.

(5) *தாவர நோயியல்.-* தாவர நிர்ப்பீடனம், நிர்ப்பீடனங்களுக்குத் தாவரங்களின் தூண்டற்பேறு, உயிரியல் கட்டுப்பாடு, நோய்க் கட்டுப்பாட்டில் நவீன போக்கு.

(6) *பூச்சியியல் கோட்பாடுகள்.-* வினாத்தாளின் 4 உப பிரிவின்கீழ் காட்டப்பட்டுள்ளது.

(7) வெளிக்கள ஆய்வுக் கோட்பாடுகள், புள்ளிவிபர கோட்பாடுகள் (Statistical Principles) இலங்கையின் விவசாயத் துறைகளில் முக்கியமான புள்ளி விபரங்கள் பற்றிய ஆய்வு.

(8) *பூச்சியியல்.*- (விவசாயத்தில் பொருளாதார ரீதியில் முக்கியமான கிருமிகள், அவற்றின் வகைப்படுத்தல்கள், வெளிக்கள உள்ள குணநலன்கள், பல்வேறு தொகுதிகளில் நிர்மாணம் மற்றும் அவற்றால் செய்யப்படும் கருமங்கள், பீடைகள் கட்டுப்பாடு பீடைப் பாதிப்புகளின் முக்கியத்துவம், பீடைகளை இனங்காணல், அவற்றின் பாதிப்புகளும் கட்டுப்பாடுகளும், ஒன்றிணைத்த பீடைகள் முகாமைத்துவம்.

(9) *நுண் உயிரினவியல்.*- நுண் உயிர்கள் மற்றும் விவசாயச் சுற்றாடல், உயிரியல் தொழில்நுட்பம், விவசாயத்துக்காக பாவனை, மண் உயிர் மற்றும் விவசாயத்துக்கு அவற்றின் செல்வாக்கு.

(10) *உயிரினப் புள்ளிவிபரவியலும் பிரயோக புள்ளிவிபரவியலும்.*- புள்ளிவிபரவியல் சம்பந்தமான ஆரம்ப அறிவு, விவசாயத்தில் ஆராய்ச்சி, திட்டமிடல், பகுப்பாய்வுத் தகவல்கள் பெற்றுக்கொள்ளல் மற்றும் அவைகளைப் பகுப்பாய்வு செய்தல்.

**குறிப்பு**.- திறந்த மற்றும் வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்புகள் மூலம் ஆராய்ச்சி அலுவலர் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் எல்லா பரீட்சார்த்திகளும் மேலே (அ) அல்லது (ஆ) வில் குறிப்பிடப்பட்டுள்ள 2 பிரிவுகளில் ஏதாவதொரு பிரிவுக்கு மட்டும் விடையளித்தல் கட்டாயமாகும்.

(ii) ***விவசாய உத்தியோகத்தர், விரிவுரையாளர் விடயத்தில் நிபுணத்துநர் பதவிகளுக்கான வினாத்தாள் :-***

(1) *பொது விவசாயம்.*- இலங்கையின் காலநிலை வலயம், காணி அபிவிருத்தி, நிலம் பண்படுத்தல், கருவிகள், பயிர் ஸ்தாபித்தல் அதற்கு அவசியமான இயந்திராதிகள், மண், மண்ணின் போசாக்கு, நாற்று மேடையும் நாற்றுமேடை பரிபாலனமும், நடுகைப் பொருட்கள், பீடைகளும் பீடைக் கட்டுப்பாடும், தாவரப் பாதுகாப்பு உபகரணங்கள், பயிர்ச்செய்கை முறைகள், நீர் விநியோக முறைகள், ஒன்றிணைந்த விவசாயச் செய்கை, பாதுகாக்கப்பட்ட விவசாயம், சிறிய நீர் விநியோகத் திட்டம், விளைச்சல் அறுவடையும், விளைச்சல் அறுவடை செய்யும் உபகரணங்களும், பின் விளைச்சல் பாதிப்பு, பண்ணை உற்பத்திகளைப் பதனிடுதல், முக்கியமான பிரதேசங்களில் பயிரிடத் தகுதிவாய்ந்த மரக்கறி வகைகள், பழங்கள், வன்தானியங்கள், தானியங்களை தெரிவுசெய்வதில் கவனிக்கப்படவேண்டிய விடயங்கள் ஒன்றிணைந்த பீடைக்கட்டுப்பாடு, ஒன்றிணைந்த தாவரப் போசாக்கு அமைப்பு, தாவர பாதுகாப்புச் சட்டம், மண் பாதுகாப்புச் சட்டம்.

(2) *பயிர் உற்பத்தி.*- பயிராக்கவியல், விவசாயக் காலநிலையும் சுற்றாடலும், காணி அபிவிருத்தி மற்றும் நிலப்பண்படுத்தல், பயிர்களின் வளர்ச்சியின் கோட்பாடுகள், தாவர உடற்றொழிலியல், பயிர்களின் வளர்ச்சி, மதிப்பிடல், விளைச்சல், பாதுகாப்பு, உரச்சிபாரிசு மற்றும் அவற்றின் வினைத்திறன், களைகளின் உயிரியல் மற்றும் கட்டுப்பாடு, நீர் விநியோகம், பயிராக்கவியல், பயிர் நீர் இவைகளுக்கிடையிலான தொடர்புகளின் கோட்பாடு.

(3) *வயல் பயிர்கள்.*- அறிமுகம், சுற்றாடல் தேவைகள், தாவர விசேடங்களும், இனங்களும் கன்றுகள் வளர்ச்சியின் உடற்றொழிலியல் விளைச்சலைத் தீர்மானிப்பதில் உடற்றொழிலியல் ரீதியான கோட்பாடுகள், நெல்லில் பயிராக்கவியல், பயிர் கட்டுப்பாடும் உற்பத்தியும், மேட்டு நிலம், தானிங்கள், வன்தானியங்கள், கிழங்குப் பயிர்கள், ஏனைய முக்கியமான வயற் பயிர்கள் (புகையிலை, வெங்காயம், சணல், பயிர் மற்றும் எண்ணெய்ப் பயிர்கள்.

(4) *பயிர் முகாமைத்துவம்.*- இடைப்பயிர்ச்செய்கை, விளைச்சல் அறுவடை செய்தல் மற்றும் பதனிடல்.

(5) *பூங்கனியியற் பயிர்கள் உற்பத்தி.*- பழப்பயிர்ச் செய்கை, போசாக்குப் பெறுமதி, அங்கத்துவ மற்றும் பொருளாதார காரணிகள் ஆரம்பமும் விஸ்தரிப்பும், சுற்றாடல் தேவைகள், உற்பத்தி முறைகள், புதிய தொழில்நுட்ப முறைகளின் பாவனை.

(6) *பழங்கள், மரக்கறி மற்றும் மலர்ச்செய்கை.*- நாற்றுமேடைப் பரிபாலனம், தோட்டப் பரிபாலனம், பயிரோடு ஒட்டிய புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் செய்கை முறைகள், பழங்கள், மரக்கறிப் பயிர்களை மேம்படுத்தல், பழங்கள், மரக்கறி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கை முறை, அறுவடைக்குப் பின்னான பாதிப்பு, பழங்கள், மரக்கறிகள் ஆகியவற்றுக்கு அறுவடைக்குப் பின்னான உயிரியல் தொழில்நுட்பம், பழங்களுக்கும், மரக்கறிகளுக்கும் தேசிய மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் நூதன வரையறைகளும் எதிர்கால உபாய மார்க்கங்களும், மரக்கறிச் செய்கைக்கான தேவைகள், மரக்கறியை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கை முறைகள், விற்பனை செய்தல், மலர்ச்செய்கைக் கைத்தொழில், பிரசாரத் தொழில்நுட்பம், செய்கை முறைகள், அனுகூலமான வழியலகு, பூமி அலங்காரக் கோட்பாடு.:

(7) *விவசாய விரிவாக்கல் பயிற்சி.*- விவசாய விரிவாக்கல் பொருள் கோடலும் அதன் குறிக்கோள்களும், விவசாய அபிவிருத்தியும் விவசாய விரிவாக்கமும் இசைவாக்கமும், புதியன பரவலும் தொடர்பாடல், விரிவாக்கல் கற்பித்தல் முறைகள், இலங்கையில் பயன்பாட்டிலுள்ள விரிவாக்கல் அணுகுமுறைகள், விரிவாக்கலுக்கும் ஆய்வுக்குமிடையேயான தொடர்பு விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடல், மீளாய்வும் மதிப்பீடும், இலங்கையில் விவசாய விரிவாக்கலோடு தொடர்புடைய நிறுவனங்கள், வளர்ந்தோர் கல்வி, பயிற்சியளித்தல் நடைமுறை, பயிற்சித் தேவைகளை இனங்காண பயன்படுத்தும் முறைமைகள், பாடத்திட்டங்களை தயாரித்தல், பயிற்சியும் மதிப்பீடும், பயிற்சியின்போது கற்புல செவிப்புல சாதனங்கள் பயன்படுத்துதல்.

(8) *விதைத் தொழில்நுட்பம்.*- விதை உடற் கட்டமைப்பியல், விதை கட்டமைப்பு, விதை உருவவியல், விதை முளைத்தல், விதை முளைத்தல் சக்தி, விதை பரிசோதித்தல், விதை முளைத்தல் சக்தியும் தூய்மையும் பற்றிய பரிசோதனைகள் விதை உற்பத்திச் சந்தர்ப்பங்கள், விதை அத்தாட்சிப்படுத்தல், விதை களஞ்சியப்படுத்தல்.

(iii) ***விவசாயப் பொருளியலாளர் பதவிக்கான வினாத்தாள் :***

(1) *விவசாய உற்பத்திப் பொருளியல் மற்றும் பண்ணை முகாமைத்துவம்.-* விவசாய உற்பத்தியில் பண்ணை முகாமைத்துவத்தின் முக்கியத்துவம், அடிப்படைச் சங்கற்பம், உற்பத்திச் செயற்பாடு, உற்பத்திச் செயற்பாடுகளின் சுயரூபம், உற்பத்திச் செயற்பாடுகளின் வடிவம், உற்பத்தி, நடுநிலை, வக்கிரமான வேகம், சமவருமான ரேகை, உழைக்கும் வளங்களின் இணைப்பு மற்றும் செலவுகளை முடிந்த அளவு சிறியதாக்கும் கோட்பாடு, குறைவடையும் விளைச்சல் கோட்பாடுகள் மற்றும் பொருள் மற்றும் வருமான எதிர்விளைவுகள், விவசாயத்தில் உள்ள இடர்களும் சந்தேகத்துக்கிடமானவைகளும், சந்தேகத்துக்கிடமானவைகளுக்கு முகம் கொடுப்பதற்கு உற்பத்தியை தயார் செய்வதன் சுபாவம் மற்றும் பல்வகைப்படுத்தல், விவசாய விலைகள் குறிப்பதற்குத் தொடர்புடைய விலைக்கோட்பாடு பயிர்கள் மற்றும் கால்நடைகள் இணைப்புகளை மதிப்பீடு செய்தல், பண்ணை அளவு மற்றும் பொருளாதாரப் பலன், குடும்பப் பண்ணைகளின் முக்கியத்துவம் மற்றும் அநுகூலமான நன்மைகள் பற்றிய கோட்பாடு, பண்ணை இயக்கங்களின் பலமுள்ள மற்றும் பலவீனமான விடயங்களை நிர்ணயிப்பதில் குறிப்புகளில் உள்ள முக்கியத்துவம் மற்றும் அதிஉயர்ந்த மாதிரிகளுக்காக இத்தகவல்களைச் சேர்த்தல்.

(2) *விவசாய சந்தைப்படுத்தல்.-* விற்பனை செய்வதில்பொதுவான கோட்பாடு, உற்பத்தியிலும் விற்பனையிலும் சார்பு ரீதியான முக்கியத்துவம், இலங்கையின் விற்பனை சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனங்கள், விற்பனை வழிகளை விருத்தி செய்வதில் தாக்கத்தை ஏற்படுத்துவதில் அவ்வாறான நிறுவனத்தின் வேலைப் பொறுப்புகள், இலங்கையின் விவசாயப் பொருட்களை விற்பனை செய்வதில் முகங்கொடுக்க நேரிடும் தடைகள் மற்றும் விற்பனை வினைத்திறனை மேம்படுத்துவதுடன் தொடர்புடைய கோட்பாடுகள்.

(3) *காணிப் பொருளியல்.-* பொருளியல் கோட்பாடுகள் காணிப் பாவனையில் செல்வாக்கு செலுத்தும் விதம், இலங்கையில் காணிகளுக்கான கேள்விகளும் விநியோகமும், காணிப் பாவனை நடவடிக்கைகள் இலங்கையில் திட்டமிடப்படும் விதம், இலங்கையில் விவசாய குடியேற்றங்கள் நிறுவுதலும் மக்களை குடியேற்றும் வேலைத்திட்டங்களின் முக்கியத்துவமும்.

9-185

---

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அமெச்சூர் வானொலி இயக்குநர்களின் திறமைச் சான்றிதழ்களுக்கான பரீட்சை

***திறமைச் சான்றிதழ்களுக்கான வகைகள் :***

(அ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் உயர்தர வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;
(ஆ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் பொது வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;
(இ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் புதுப் பயிலுநர் திறமைகாண் சான்றிதழ் ;

2. பரீட்சை எடுக்க விரும்புவோருக்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள்.- இப்பரீட்சை எடுக்க விரும்பும் ஒவ்வொருவரும் பதினான்கு (14) வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

3. ***பரீட்சைத் திட்டம் :***

(அ) *உயர்தர வகுப்பு.-* பரீட்சை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது:-

*பகுதி 1* : இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - உயர் மின்னியல் தொழில்நுட்ப வானொலித் தொலைத்தொடர்புகள் (3 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அவதான நடவடிக்கை முறைகள் - (2 மணித்தியாலங்கள்)

*பகுதி 2* : செயல் முறை மோர்ஸ் (Morse) கோட் பரீட்சை (ஒரு நிமிடத்தில் 05 சொற்கள்)

(ஆ) ***பொது வகுப்பு.-***

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல் தொழில் நுட்ப வானொலித் தொலைத் தொடர்புகள் (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலங்கள்)

(இ) ***புதுப் பயிலுநர்.-***

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல், வானொலி மற்றும் இலத்திரனியல் கோட்பாடுகள் - (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலம்)

4. **பரீட்சைகளுக்கான நிபந்தனைகள்.**- எல்லாத் திறமைச் சான்றிதழ்களின் பகுதிகளுக்கும் பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடையன வாதல் வேண்டும் :-

(i) பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் எல்லாப் பகுதிகளிலும் சித்தியடைதல் வேண்டும்.
(ii) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் பகுதி 1 இல் (இரண்டு எழுத்துமூல வினாத்தாள்கள்) ஒரே அமர்வில் சித்தியடைதல் வேண்டும் ;
(iii) இப்பரீட்சையின் பகுதி 1 இல் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டுமே பகுதி 2 இற்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப் படுவார்கள்;
(iv) பகுதி 1 இல் சித்தியடையும் பரீட்சார்த்திகள் ஏதாவது அடுத்துவரும் பரீட்சைகளில் பகுதி 2 இற்கு மட்டும் விண்ணப்பிக்கலாம்.

5. **பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்.**- இப்பரீட்சை ஆங்கில மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படும்.

6. **பரீட்சைக் கட்டணம்.**- பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர்கள் தங்களின் பரீட்சைக் கட்டணங்களை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். மேலும் விபரங்கள் தேவைப் படின் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவல கத்துடன் எழுத்துமூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பரீட்சைக் கட்டணமானது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பேரில் காசுக்கட்டளையாகவோ அல்லது எந்தவொரு வங்கியினதும் காசோலையாகவோ செலுத்தப்படலாம்.

நுழைவுப் படிவமானது, பதியப்பட்ட ஒப்படைப்பு மூலம் அல்லது பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது நேரடியாகக் கொண்டுவந்து கொடுக்கப்படுதல் வேண்டும். உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு வைத்திருக்கப்படுதல் வேண்டும் ஏனெனில் தபால் மூலம் அனுப்பப்பட்டதற்கான அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட்டதற்கான நிரூபணம் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி நுழைவுப் படிவம் ஒன்று கவனிக்கப்படவில்லை அல்லது தொலைந்து போயிற்று என்ற உரிமைக் கோரிக்கை எதனையும் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்கு படுத்தும் ஆணைக்குழு கவனத்திற்கொள்ளாது. கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. அத்துடன் அவை ஒரு பரீட்சையிலிருந்து பிந்திய திகதியொன்றில் இன்னொரு பரீட்சைக்கும் மாற்றப்படமுடியாது. தமது விண்ணப்பத்தை மீளப்பெறுகின்ற அல்லது ஏதேனும் காரணத்துக்காக பரீட்சைக்குத் தோற்றமுடியாத பரீட்சார்த்தி எவரும் ஏதேனும் பிந்திய நுழைவுக்காக முழுப் பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

| பரீட்சையின் வகை | பகுதி 1 இற்கான கட்டணம் ரூபா | பகுதி 2 இற்கான கட்டணம் ரூபா |
|---|---|---|
| உயர்தர வகுப்பு | 276 | 138 |
| பொது வகுப்பு | 138 | - |
| புதுப்பயிலுநர் வகுப்பு | 138 | - |

7. **விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியும் நுழைவும்.**- பரீட்சை ஒரு வருடத்தில் மூன்று முறைகள் நடாத்தப்படும். பரீட்சைத் திகதி, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பின்னர் அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் தோதான நுழைவுப் படிவத்தில் செய்யப்படல் வேண்டும். அப்படிவங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் பெறப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டு அம்முகவரிக்கு இறுதி நுழைவுத் திகதிக்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும் :-

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்,
276, எல்விட்டிகல மாவத்தை,
மனிங் ரவுன்,
கொழும்பு 08.

| சான்றிதழ்களின் வகை | இறுதி நுழைவுத் திகதி |
|---|---|
| உயர்தர வகுப்பு<br>பொது வகுப்பு<br>புதுப்பயிலுநர் வகுப்பு | 2011.09.30 |

8. **அத்தாட்சிப்படுத்தல்.**- பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வரும் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் :-

சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசுத் தரைப்படை, கடற்படை அல்லது வான்படை ஆகியவற்றின் ஆணையளிக்கப்பட்ட அலுவலர், வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர், அரசாங்க சேவையில் ஆண்டொன்றுக்கு ரூபா 4,93,920 க்குக் குறையாத திரட்டிய சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர்.

இவ்வாறு அமையாத மற்றைய விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக் கப்படும்.

9. **பரீட்சார்த்திகளை இனம் காணல்.**- பரீட்சையில் பரீட்சார்த்தி ஒருவர் தமது ஆளடையாளத்தைக் காட்டுமாறு தேவைப்படுத்தப் படுவார். அதற்காக பின்வரும் ஆவணங்களில் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படும் :-

(அ) அஞ்சல் மா அதிபதியால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(இ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப் பட்ட தேசிய ஆளடையாள அட்டை.

எல்லாப் பரீட்சார்த்திகளும், 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கப் பரீட்சைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயல்படுமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

இவ்விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் ஏற்பாடு செய்யப்படாத விடயம் எதுவும் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் தீர்த்து வைக்கப்படும்.

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைத் தொலைத்தொடர்புகள்
ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
276, எல்விட்டிகல மாவத்தை,
மனிங் ரவுன்,
கொழும்பு 08,
2011.08.26.

9-213

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2010 (2011)**

மேலே குறிப்பிடப்பட்ட சேவையில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2011 ஆம் ஆண்டு திசெம்பர் ஆரம்பத்தில் பேராதனையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதியன்று கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடவிதானம்**.- முதலாம், இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்குப் பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் அதன் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான I ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான பாடத்திட்டம் இணைப்பு 'அ' விலும் II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான பாடத்திட்டம் இணைப்பு 'ஆ' விலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் பரீட்சைகளின்போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை

| | 1 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | | | 2 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | |
|---|---|---|---|---|---|
| தொடர் இல. | விடயம் | நேரம் (மணி) | தொடர் இல. | விடயம் | நேரம் (மணி) |
| 01 | நிதி முறைமைகள் | 03 | 01 | 1 ஆம் பகுதி | 03 |
| 02 | நிருவாகம் | 03 | 02 | 2 ஆம் பகுதி | 03 |
| 03 | திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் 01 | 02 | 03 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் I | 03 |
| 04 | திணைக்களப் பிரமாணம் வினாப்பத்திரம் 02 | 03 | 04 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் II | 03 |
| 05 | விசேட வினாப்பத்திரம்* | 03 | 05 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் III | 03 |
| | | | 06 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் IV | 03 |
| | | | 07 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் V | 03 |
| | | | 08 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VI | 03 |
| | | | 09 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VII | 03 |
| | | | 10 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VIII | 03 |
| | | | 11 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் IX | 03 |
| | | | 12 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் X | 03 |
| | | | 13 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் XI | 03 |

*இதன் பொருட்டு கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**குறிப்பு**.- இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை விண்ணப்பதாரிகள் அமரவேண்டியது பகுதி 1 அல்லது பகுதி 2 வினாப்பத்திரம் இரண்டில் ஒன்றுக்கும் மற்றும் பகுதி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள XI வினாப்பத்திரங்களில் இருந்து இரு வினாப்பத்திரங்களுக்கு மட்டும் அமரல் வேண்டும். சித்தி எய்துவதன் பொருட்டு ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் பெறுதல் வேண்டும்.

5. கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையில் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

திணைக்களப் பரீட்சை (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை உட்பட) பரீட்சைக்குத் தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலாகும் அல்லது அரச கரும மொழியிலாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்குச் சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்கவேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்ந்துகொள்வதற்கு தகுதிபெற்ற அல்லது அரச கரும மொழியாகும்.

6. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வினாப்பத்திரங்களுக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விடையளிக்க பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இயலாது :-

(i) நிதி முறைமைகள்
(ii) நிருவாகம்
(iii) திணைக்களப் பிரமாணங்கள் I
(iv) திணைக்களப் பிரமாணங்கள் II

7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்கு தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

8. விண்ணப்பங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய ஏ4 தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட இரு பரீட்சைகளுக்கும் சமுகமளிப்பதானால் வெவ்வேறாக ஒவ்வொரு பரீட்சையின் பொருட்டும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தொடர் இலக்கம் 1 முதல் 8 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்தில் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்தக் கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைய அமையாத விண்ணப்பங்களும் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும் மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிமும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

10. விண்ணப்பப்படிவங்கள் யாவும் 2011.09.30 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும் :-

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
கெட்டம்பே, பேராதனை

11. விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு அறியக்கொடுத்தல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் ஒளிப்படப்பிரதி மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுபடுத்தப்பட்ட ஒளிப்படப் பிரதி மற்றும் பதிவுத் தபாலிட்ட பற்றுச்சீட்டுடன், கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் அனுமதி அட்டையை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினைக் குறிப்பிட்டு உங்களது வேண்டுகோள் கடிதத்துடன் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு அறியக்கொடுப்பது சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பினனர் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

13. அடையாள அட்டை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட 1971, யூன் மாதம் 29 ஆந் திகதியிடப்பட்டதும் எஸ். ஈ. 274 ஆம் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கை பரீட்சார்த்திகள் அனைவரினதும் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும். இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமேயாகும்.

14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது :-

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) இதன்பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-

| | |
|---|---|
| முழுப்பரீட்சை | - ரூபா 400.00 |
| ஒரு பாடம் | - ரூபா 200.00 |

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு செலவு வைக்குமாறு தீவில் அமையப்பெற்றுள்ள எந்தவொரு தபால் பணிமனையிலும்/மாவட்ட அல்லது பிரதேச செயலாளர் பணிமனையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

15. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

ஏ. எச். கமகே,
செயலாளர்,
கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு ,
இல. 45, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03,
2011.08.12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பரீட்சைத் திணைக்களம் - இலங்கை**

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான
வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2010 (2011)
EFFICIENCY BAR EXAMINATION FOR THE OFFICERS OF THE SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE - 2010 (2011)

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)
வினைத்திறமை தடைகாண் பரீட்சைகள் 1 மற்றும் 2 இற்கு ஒரே நேரத்தில் தோற்ற விரும்பின் அவற்றிற்காக இரண்டு விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம்
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

உத்தியோகத்தர் விண்ணப்பிக்கும் பரீட்சை
முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 1
இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(உதாரணம் NIMALASIRI, K. A)

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :----.

2. பிறந்த திகதி :- ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3. பதவிப் பெயர் :----.
திணைக்களத்தின் பெயர் :----.

4. தபால் முகவரி (அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக) :----.

5. இலங்கை கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

6. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) :-

(i) பாட எண் ☐☐ பாடம் ..............
(ii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iv) பாட எண் ☐☐ பாடம் ..............
(v) பாட எண் ☐☐ பாடம் ..............

7. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :----.

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும் விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுதுவதற்கு உரித்தாவேன் எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

9. * செலுத்தப்பட்ட பரீட்சைக்கட்டணம் :----.

பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக
(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை வைத்துக்கொள்ளவும்)

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் :**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும், குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தில் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது எனவும், விண்ணப்பதாரர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை ஒட்டி உள்ளார் எனவும், பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.

திகதி :----.
(*கட்டணம் செலுத்தாதவிடத்து வெட்டிவிடவும்)

*பின்னிணைப்பு "அ"*

(அ) இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின்போது பின்வரும் பாடங்களில் சித்தி அடைதல் வேண்டும் :

1. நிதி முறை
2. நிருவாகம்
3. திணைக்களப் பிரமாணங்கள் I
4. திணைக்களப் பிரமாணங்கள் II

(1) *நிதிமுறை.-* நிதி என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :

(அ) இலங்கை அரசாங்க நிதி ஒழுங்குவிதி பகுதி I (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் - X ஆம் அத்தியாயம் தவிர)
(ஆ) நடப்பாண்டு மதிப்பீடுகள்.- (உதாரணம் :- வருமானத் தலைப்பு தயாரித்தல் அரசிறை தலைப்புகள், நிதி ஒதுக்கீட்டுச் சட்டங்கள்)
(இ) கச்சேரிகளினூடாக விசேடமாக மேற்கொள்ளப்படும் கணக்குகள் சட்டம்

**குறிப்பு.**- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறல் வேண்டும்.

(2) *நிருவாகம்.-* நிருவாகம் என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :

(அ) அலுவலக மற்றும் துறைகளை ஒழுங்குபடுத்தும் முறைமைகள்
(ஆ) தாபனவிதிக்கோவை அத்தியாயம் I, II, III, V, VI, VII, IX, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII.

**குறிப்பு.**- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

(3) *திணைக்களப் பிரமாணங்கள் I.-* திணைக்களப் பிரமாணம் என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :-

இப்பரீட்சை வினாத்தாள் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கிய இரண்டு மணித்தியால வினாப்பத்திரமாகும்.

ஸ்பரிசத்துடன் தொற்றிப் பரவும் தொற்று நோய்க்கான சட்டம் மற்றும் திணைக்கள கட்டளை கால்நடை வைத்திய சேவைக்கு பொருத்தமான சுற்றுநிருபங்கள்.

**குறிப்பு.**- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

(4) திணைக்களப் பிரமாணங்கள் II.- திணைக்களப் பிரமாணம் என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட 3 மணித்தியால வினாப்பத்திரமாகும்.

(அ) மாதிரிகளை அனுப்புதல், பிரேத பரிசோதனை உள்ளிட்ட நோய் ஆய்வு, உறுதி ஆய்வுகூட பரிசோதனை முறைகள், கர்ப்ப பரிசோதனை உள்ளிட்ட இனங்காணும் பரிசோதனை, வெளிக்கள நோய் ஆய்வு உறுதி பரிசோதனைகள், விலங்குகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து, குருதி பாயம் (Sera) ஆகிய முற்காப்பு நடவடிக்கைகள் ;

(ஆ) செயற்கைமுறைச் சினைப்படுத்தல் செயல்முறையும் தொழிநுட்பமும், இனப்பெருக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களும் கன்று வளர்ப்பும், அடைகாத்தல், குஞ்சு பொரித்தல், கோழிக்குஞ்சு வளர்ப்பு, கால்நடைகளுக்கான போஷணை, உணவுப் பண்டம், பசுந்தீவனப் பயிர்ச்செய்கை, வெவ்வேறுபட்ட பயிர்கள், புற்செய்கை, உலர்புல், சைலேஜ் தயாரிப்பு, கல்நடைப் பராமரிப்பு என்பன ;

(இ) பால் உற்பத்தி, கிருமியளிக்கப்பட்ட பாலை போத்தல்களில் அடைத்து எடுத்துச் செல்லல், பால் சுகாதாரம் பாதுகாப்பு, பால் ஆடை பகுத்தல் உள்ளடங்கலாக பரிசீலனை செய்தல், பால் ஆடை நீக்கல், பட்டர் நெய் மற்றும் தயிர் உற்பத்தி ;

(ஈ) அறுப்பு நிலையம், விலங்கு அறுப்புச் செய்தல், இறைச்சிகளை இனங்காணுதல் உட்பட இறைச்சிகளை பரீட்சித்தல்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

*பின்னிணைப்பு "ஆ"*

(அ) இலங்கை கால்நடைவள உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின்போது பின்வரும் பாடங்களில் சித்தியடைதல் வேண்டும் :-

பகுதி I – பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-

2.1, 2.2, 4.1, 4.2, 5.2, 5.8, 6.5, 7.2.1, 8.2, 8.2.2, 8.2.3, 8.3.1, 9.2, 9.4, 9.6, 9.7 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பகுதி II – பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-

1.1.1, 1.1.4, 1.2.1, 3.2, 3.1.1, 3.1.2, 3.2.1, 10.1.1, 10.1.2, 10.1.3, 10.1.4, 10.1.6, 10.2.1, 10.2.8, 10.4.1 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பகுதி III – வினாத்தாள்-

1. தொற்றுநோயியல்
2. கால்நடைப் பொருளியல்
3. மிருக வைத்திய பொதுச் சுகாதாரம்
4. விவசாய விஸ்தரிப்பு
5. பரம்பரையியல் சினைப்படுத்தல்
6. விலங்கு உடற்றொழிலியலும் இனப்பெருக்கமும்
7. வீடமைப்பு முகாமைத்துவம்
8. விலங்குப் போசணை
9. பசும்புல் மற்றும் விலங்கு தீவனப் பயிர்
10. பிரயோக மிருகவியல் நுண்ணுயிரியலும் நீர்ப்பீடணவியலும்
11. பிரயோக மருத்துவம், நோயியல் மற்றும் ஒட்டுண்ணியல்

இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

9-365

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.